**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**17.02.2026**

OS. No. 33/2011

பக்கம் – 7

DW1 – சேஷாசலம்

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

4ம் பிரதிவாதியின் தந்தை ஹரி புஜங்காராவுக்கு இது கூட்டுக் குடும்ப சொத்தாகும். ஹரி புஜங்காராவ் இந்த சொத்து தொடர்பாக ஒரு உயில் எழுதி வைத்துள்ளார். ஹரி புஜங்கராவ் அவருடைய வாரிசுகள் அனைவருக்கும் சொத்தில் உரிமையை நிலைநாட்ட அனைவருக்கும் உயில் எழுதி வைத்துள்ளார். ஹரி புஜங்கரா முதல்வாதி வெங்கடஷேசன், நான்காம் பிரதிவாதி திருமூர்த்தி ராவ் மற்றும் ஐந்தாம் பிரதிவாதி சிவராமன் ஆகியோருக்கு கூட்டாக தான் உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த உயிர் நடைமுறைக்கு வராத காரணத்தினால் தான் பாகப்பிரிவினை கோரி வெங்கடஷேசன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறாகும். வெங்கடஷேசன் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அவர் கோரிய பரிகாரத்தின் படி அனுமதிக்கத்தக்கது என்றும் அதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல.

(6 முதல் 9 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.